

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2020





All Books
Just
Rs300/-

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் புதிய வெளியீடு ரேடியோ மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த தேவ செய்திகள் அடங்கிய Vol.6 தேவைப்படுவோர் கீழ்கண்ட முகவரிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

**Dr. ராதாகிருஷ்ணன்** அவர்கள்
ஆசிரியராகத் தன் பணியைத் தொடங்கி
பாரதநாட்டின் மிக உயரிய
ஜனாதிபதி பதவியை அடைந்தவர்.
இவரது பிறந்த நாளே ஆசிரியர் தினமாக
செப்டம்பர் 5 ம் தேதி கொண்டாடப்படுகிறது.






தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 | செப்டம்பர் 2020 | கனி 10



THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 10

தலைப்பு : பாவ நிவாரணபலி - Sin offering

வேத வாசிப்பு : 2நாளாகமம் 29:1-24

1. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் - லேவி.4:3, எபி.7:27
2. இஸ்ரவேல் அனைத்திற்காக - 2நாளா.29:24
3. பிள்ளை பெற்றவள் - லேவி.12:6-8

**மனிதன் உருவாக்கின இரட்சிப்பு**

- விசுவாசம் மாத்திரம்
- கிருபை மாத்திரம்
- இயேசுவை உன் இருதயத்திற்குள் வரும்படி கேட்டல்
- ஒரு நல்ல மனிதனாய் வாழ்தல்

**தேவன் சுவாசித்த இரட்சிப்பு**

- இயேசுவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிதல்
- கேள்விபடுதல் - ரோமர் 10:17
- விசுவாசித்தல் - யோவான் 8:24
- மனந்திரும்புதல் - லூக்கா 13:3
- அறிக்கையிடுதல் - ரோமர் 10:10
- ஞானஸ்நானம் பெறுதல் - மாற்கு 16:16

**காலம் கடந்து போகும் வரை காத்திருக்காதே மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசி**


**the word of christ Channel** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

தொடர்புக்கு: 9443558041, 6379350509

YouTube









**THE WORD OF CHRIST**

Monthly Magazine

Editor

B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 241

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவருடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்று சொல்லியிருக்கிறது?
2. யாதொரு வேலைசெய்ய ஒரு கட்டையும் எடுக்கப்படமுடியாத செடி எது?
3. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் கீர்த்தியுண்டா ?
4. அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர் என்ற தீர்க்கன் யார்?
5. அப்பொழுது இருந்த உலகம் எதினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்?
6. எவன் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான் அவனைப் போகவிடு என கர்த்தர் சொன்னார்?
7. அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள் அதினாலே இது எக்காலமென்று அறிகிறோம்?
8. தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் என்று சொன்ன தீர்க்கன் யார்?
9. எந்த தூதன் எக்காளம் ஊதும்போது கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்?
10. தங்கள் பிதாக்கள் பின்பற்றின பொய்களினால் மோசம் போனவர்கள் யார்?

வேத அறிவுப்போட்டில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் புதிய வெளியீடு Vol.6 புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்

## வேதாகம ஆய்வு... 26

## இஸ்மவேல் - Ishmael



1. இஸ்மவேல் என்றால் தேவன் கேட்பார் என்று அர்த்தம்
2. ஆபிராமுக்கு ஆகார் பெற்ற மகன் – ஆதி.16:15
3. ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்றபோது ஆபிராம் வயது 86 – ஆதி.16:16
4. ஒரே நாளிலே ஆபிராமும் இஸ்மவேலும் விருத்தசேதனம் பண்ணைப்பட்டார்கள் – ஆதி.17:26
5. இஸ்மவேல் மரிக்கும்போது வயது 137 – ஆதி.25:17

சிறுவர் பகுதி

## அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள்

வேத பகுதி: யோவான் 6:24-29



ஒரு முறை ஜனங்கள் இயேசுவைத்தேடி வந்தார்கள். அப்பொழுது கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: மிகுந்த அக்கறையினால் அவரை விசாரிப்பதுபோல ரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னசொன்னார் தெரியுமா? நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அன்றைய நாட்களில் இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்ததைக் கண்ட ஜனங்கள், மீண்டும் அப்பத்தை கொடுப்பார் என்று அவரை நாட ஆரம்பித்தனர். இன்றைய நாட்களிலும் உணவுக்காக இயேசுவை பின்பற்றுகிறவர்களைப் பார்க்கிறோம். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தையை அநேகர் நம்பாமற்போகிறார்கள்.

ஆகையால் தான் இயேசு அவர்களைப்பார்த்து அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். அப்படியானால், நாங்கள் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி என்ன செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: தேவனை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

இன்றைக்கு தேவனை நீங்கள் முதலாவது நம்பவேண்டும். அவரால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கவேண்டும். இதுதான் கிரியையுள்ள விசுவாசம். உணவு நம் எல்லோருக்கும் தேவை என்பதை நம் பரம பிதாவாகிய தேவன் அறிந்திருக்கிறார்.இந்த உணவு நாம் சரீரத்தில் இருக்கும்வரை நமக்குத் தேவை. ஆனால் நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்ககூடிய போஜனம், அவருடைய வசனமே. அதற்கேற்ப கிரியை நடப்பிக்கவேண்டும். நடப்பிப்பீர்களா!

### மனப்பாட வசனம்:

"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" (யோவா.6:27).

### நடப்புச்செய்திகள்

- ❐ லாக்டவுன் காலம் நமக்கு சில பாடங்களை கற்றுத் தந்துள்ளது.
- ❐ டெல்லியில் இருந்து லண்டனுக்கு பேருந்திலேயே செல்லும் திட்டத்தை சுற்றுலா நிறுவனம் ஒன்று அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❐ நடப்பு நிதியாண்டில் 2000 ரூபாய் நோட்டுகளை அச்சிடபோவதில்லை என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 செப்டம்பர் -2020 கனி - 10

ஆசிரியருரை

## தேற்றரவாளன் - The Helper



ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை திக்கற்றவர்களாக விடாமல் அவர்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" என்றார் (யோவா.16:7). தேற்றரவாளன் கர்த்தருடைய பிள்ளைகளை தேற்றுகிறார். இயேசு சீஷர்களை விட்டு பிதாவினிடத்தில் செல்லும்வேளை வந்தது அந்த வேளையில் சீஷர்கள் கலக்கமடைந்தார்கள். தேவனுடைய சித்தம் முழுவதும் நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காக ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாக சொன்னார். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2தீமோ.1:7). இதோ ஓநாய்களுக்குள்ளே உங்களை அனுப்புகிறேன் என்று அப்போஸ்தலர்களைப்பார்த்து சொன்னார். ஆனாலும் அவர்களோடு இருந்த தேற்றரவாளன் அவர்கள் உபத்திரவப்படும்போது தேற்றினார். அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் எனக் குறிப்பிடுகிறார்.

தேவனுடைய மக்களுக்கு இந்த சரீரத்தைக்குறித்து பயமில்லை. ஏனெனில், அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இந்த சரீரத்தை அவர்கள் கொன்றுபோட்டாலும் தேவன் மகிமையுள்ள சரீரமாக அவருடைய வருகையிலே மாற்றுவார். ஆகையால் சரீரத்தை கொள்ளுகிறவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றார். அந்தப்படியாக ஸ்தேவான் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கிக்கும்போது; தேவனை அறிந்த ஜனங்களாலே கல்லால் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். அவன் அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று தொழுதுகொண்டான். அவன் அவர்களுக்குப் பயப்படவில்லை ஏனெனில் அவன் பயத்தின் ஆவியைப்பெறாமல் அன்பும் பலமும் தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றதினால் அவர்கள் தன்னைக் கல்லால் அடிப்பதற்கு பயப்படாமல் கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்துக்கொண்டிருந்தான். அன்பானவர்களே, கர்த்தர் அவருடைய பிள்ளைகளை தேற்றும்படியாக தேற்றரவாளனை அனுப்பினார். அவர் சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்தினார் எனக்காண்கிறோம். பவுல்

சொல்லும்போது; "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" என்கிறார் (பிலி.4:13). முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வார்த்தையால் பெலப்பட்டார்கள். பயமின்றி கர்த்தருடைய வசனத்தை பிரசங்கித்தார்கள். பேதுரு யோவான் போன்றோர் எல்லாம் தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப்பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள். மேலும் அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினாலே சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுபோனார்கள் என்றெல்லாம் பார்க்கிறோம். ஆம், அன்பானவர்களே தேற்றரவாளன் அவர்களை அவ்வப்போது தேற்றி கர்த்தருடைய நாமம் மகிமைப்பட அவர்களை பெலப்படுத்தினார்.

நியாயாதிபதிகளின் காலத்தில் வாழ்ந்த சிம்சோன் என்ற மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவனை பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்து இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள். "அவன் லேகிவரைக்கும் வந்துசேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள்; அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்துபோயிற்று" (நியா.15:14). இங்கே சிம்சோன் கர்த்தருடைய ஆவியானவரின் பெலத்தைப் பெற்றுக்கொண்டான்.


அதைப்போல தேவன் நமக்கு அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்ன வசனத்தை படித்தோம். ஆம், தேற்றரவாளன் அன்புள்ளவர் அந்த அன்பை நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். அவர் அப்போஸ்தலர்களைக் கொண்டு சொல்லும்போது; "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களா யிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" என்கிறார் (1பேது.1:22). ஊக்கமான அன்பு செலுத்தும்படியாக ஆவியானவர் நம்மை உற்சாகப்படுத்துகிறார். அன்பு திரளான பாவங்களை மூடும். ஆகையால் சகோதர சிநேகத்தில் நிலைத்திருந்து ஆவிக்குரியவர்களாகிய நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, மாயமற்ற சகோதரசிநேகமுள்ளவர்களாக சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும். இந்த விதமான அன்பு நம்மை கர்த்தருக்குள் நிலைக்கவும் அவருக்கேற்ற கனிகளைக் கொடுக்கவும் நம்மை தகுதிப்படுத்தும். பிரிவினைகளைத் தகர்த்தப்போடும், கர்த்தருடைய சபை வளர்ச்சியடைவதற்கு இவைகள் உதவியாயிருக்கும். கண்ட சகோதரனிடத்தில் நாம் அன்பு கூராவிட்டால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவோம் என வேதம் போதிக்கிறது. நாம் தேற்றரவாளனை உடையவர்களாக இருப்போமானால் அந்த சத்திய ஆவியானவர் அவருடைய பணி வளர்ச்சியடைவதற்கான காரியங்களை நம்மிலே செய்வார். மேலும், "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" என எழுதுகிறார் (1பேது.4:8). அவர் முதலாவது என்னில் அன்பாயிருக்கட்டும் பின்பு நான் அவரில் அன்பாயிருப்பேன் என்று நாம் வாக்குவாதம் பண்ணமுடியாது. நாம் அன்பிலே நிலைத்திருக்கும்படியாக



இச்சைகள். பிசாசு அன்றைய நாளில் ஏவாளிடத்தில் இச்சைகளைத் தூண்டி தேவனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்படி செய்தானே, அதைப்போல் இன்றும் தேவனுக்குப் பிடிக்காத அநேகக் காரியங்களை இச்சிக்கும்படி நம்மையும் வஞ்சிப்பதில் தீவிரம் காட்டி வருகிறான். வேதம் "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1தீமோ.6:10) என்று கூறுகிறது. என் பிள்ளைகளின் படிப்பு, எதிர்கால வாழ்வு, என பல காரணங்களைச் சுட்டிக்காட்டி பணத்தை சம்பாதிப்பதில் தீவிரம் காட்டுகின்றனர். ஆனால் பிள்ளைகளையோ தேவனுக்கேற்ற விதமாக வளர்க்கவும் அவர்களிடத்திலும் தன் புருஷனித்திலும் அன்பு செலுத்தவும் தவறிவிடுகின்றனர் (தீத்.2:4). கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு நம் குடும்பத்தின் மேல் அக்கரையுள்ளவர்களாயும் அன்புள்ளவர்களாயுமிருப்போம். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்...." (1யோவா.2:17). பண ஆசை என்ற இச்சையிலிருந்து மாத்திரமல்ல "மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சையும் ... பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் என்று வேதம் கூறுகிறது. இவைகள் அனைத்துமே நிலையற்றவைகள். "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சம்" (1தீமோ.6:7). கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது.3:10) எனவே அவருடைய வசனத்தைக் கைக்கொள்வோம். நம்மிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1யோவா.2:5).

அன்பு சகோதரிகளே, தேவன் அன்பாக இருக்கிறார் என்று சொல்லுகிறோமே தவிர, அதனை நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ருசிக்கத் தவறிவிடுகிறோம். நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதவன் மூலம் அறிந்து கொள்ள முடியும். தேவ அன்பு உண்மையுள்ளது, நிரந்தரமானது. எனவே முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூருவோம். "...வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1யோவா.3:18). மேலே தியானித்த முட்களைப் போல நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிற மூன்று விதமான உலகக் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம் மற்றும் மற்றவைகளைப் பற்றிய இச்சைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு வசனம் நமக்குள் பலன் செய்ய இடமளிப்போம். கர்த்தர் தாமே இக்கடைசி நாட்களில் அவருடைய வசனத்தைக் கைக்கொண்டு வாழ உதவி செய்வாராக! ஆமென்.

## கொரோனா கால சிந்தனை!



நமக்குள் பயம் ஏற்படும்போது,
என்ன செய்யப்போகிறோம்?
எப்படி வாழப்போகிறோம்?
நம்முடைய கணக்கு எல்லாம் தவறாகபோகிறதே
என்ற எண்ணம் நம்மை அச்சுறுத்துகிறது.

**இவைகளுக்கு தீர்வுகான:**

உங்களை உண்டாக்கினவரை நோக்கிப்பாருங்கள்.

1. அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர் (ரோமர் 4:17)
2. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் (சங்.33:9)
3. அவர் மரித்தோரை எழுப்புகிற தேவன் (2கொரிந்தியர்1:9)

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவா.2:15). உங்கள் குடும்பம் கணவன், பிள்ளைகளின் காரியங்கள் குறித்தும் கவலை கொள்ளும்போதும் தேவனை அறியாத உலகத்தாரைப் போல நம்மை மாற்றவும், வாழவும் நினைக்கும் போதும் தான் இந்த உலகக் கவலைகைள் நம்மை நெருக்கும். அப்படி நெருக்கும் போது பலனற்றவர்களாக மாறுகிறோம் உங்களுடைய உலகக் கவலைகளைத் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது உங்களுடைய புத்திக்கு எட்டாத தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் நிரப்பும். பயத்தோடே தேவ வசனங்களைக் கைக்கொள்ளுவோம் (பிலி.4:6).

**ஐசுவரியத்தின் மயக்கம்:**

ஐசுவரியத்தின் மயக்கம் பொதுவாக அநேக ஸ்திரீகளிடம் அளவுக்கதிகமாகவே இருக்கிறது. மத்தேயு 19:23 ல் "...இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். மேலும் பவுல் 1தீமோ.6:9 ல் "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" என்கிறார். ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் அல்லது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று இயேசு சொல்லுகிறார். பொதுவாக பணக்காரர்களுடைய இருதயம் அவர்களுடைய பணத்தின் மேலும் சொத்துக்களின் மேலும் தான் இருக்கும். தேவனுடைய விசுவாசிகளைக் குறித்து வேதம் கூறும்போது, அவர்களை அந்நியரும் பரதேசிகளும் என்றழைக்கிறது (எபி.11:13). நம்மில் யாரும் அந்நியராகவோ, பரதேசிகளாகவோ வாழ விரும்புவதில்லை. சமுதாயத்தில் நல்ல நிலையிலிருக்க வேண்டும், நான்கு பேர் நம்மை அற்பமாக எண்ணிவிடக் கூடாதென்று எண்ணி ஐசுவரியவானாக விரும்புகிறோம். அக்கம் பக்கத்தாரைப் பார்த்து அவர்களைப் போல நாமும் சொந்த பங்களாவில், இருக்க வேண்டும், வாகனம் வாங்கவேண்டும் அதுவும் வீட்டின் முன்பு நிற்கவேண்டும், நன்றாக உடுத்த வேண்டும், அணிகலன்களை ஆடம்பரமாக அணியவேண்டும் மற்றவர்கள் பார்த்து இவர்கள் பெரிய பணக்காரர் போல் தெரிகிறது எனக் கூறவேண்டும், இப்படி பல ஆசைகளை மனதில் வைத்து ஐசுவரியவான்களாக விரும்புவர். இப்படிப்பட்ட விருப்பம் நம்மில் இருக்குமானால் சோதனையிலும், கண்ணியிலும் அகப்பட்டு, நம்மைக் கேடான சூழ்நிலையிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடான பலவித இச்சைகளில் சிக்குண்டு தவிக்க நேரிடும்.

அன்பானவர்களே, நாளைக்கு நடக்கப்போவது இன்னதென்று நமக்குத் தெரியாது இன்றைய நாட்களில் அநுதினமும் பல்வேறு அழிவுகளைக் காண்கிறோம். வேதாகமத்தில் ஒரு ஐசுவரியவானை பற்றிய உவமையில் அவன் ஆத்துமாவே, உனக்காக அநேகப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது: நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும் அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார் (லூக்.12:16-20). ஐசுவரியவான்களாக வேண்மென விரும்புகிற யாவருக்கும் இதுதான் பதில். பயத்தோடு தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொள்ளுவோம், ஐசுவரியத்தின் மயக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வோம்.

**மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகள்:**

மேலும் ஸ்திரீகளாகிய நமக்குள் பலவிதமான காரியங்களில் இச்சைகள் ஏற்படுகின்றன. இந்த இச்சையானது நமது ஆதித்தாய் ஏவாளிடத்திலிருந்தே துவங்கிவிட்டது. அன்று அவளுக்கு தேவன் விலக்கிய கனியின் மேல் இச்சை இன்றைக்கோ கணக்கில்லாத



ஆவியானவரால் உற்சாகப்படுத்தப்படுகிறோம். நமக்கு எல்லாவிதத்திலும் உதவியாக கொடுக்கப்பட்ட ஆவியானவரை எந்த விஷயத்திலும் துக்கப்படுத்தாமல் நடந்துகொள்ளவேண்டும்.

அன்பு அதிகரிப்பதினால் உண்டாகும் வார்த்தைகளை கவனியுங்கள். "நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும், அப்படிச்செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்" என்கிறார் பவுல் (பிலே.9). உரிமையோடு கேட்க அதிகாரம் உண்டு. ஆனாலும், அன்பினிமித்தம் ஒநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறதை நாம் காண்கிறோம். அவன் ஏதாவது உமக்கு கொடுக்கவேண்டுமானலும் அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும் என்று எழுதுகிறார். பிறருடைய கஷ்டங்களில் பங்குகொள்வதே அன்பு. தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்த்து நம்முடைய பாவங்களை மன்னிக்கவில்லை. முதலாவது அவர் நம்மில் தம்முடைய சொந்த குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்து அன்புகூர்ந்தார். இப்படிப்பட்ட அன்பு நம்மிலேயும் உருவாகவேண்டும்.

அடுத்தபடியாக தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என வாசித்தோம். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதும் தெளிவானவர்களாகவே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு தேவன் அந்தவிதமான ஆவியையே கொடுத்திருக்கிறார். அநேகர் தாங்கள் செய்வது இன்னதென்றும் தாங்கள் சொல்வது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல்; "ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் (1கொரி.9:26,27). ஒரு நபரை சந்தித்து நீ எதற்காக கிறிஸ்தவனாய் இருக்கிறாய் என்று கேட்கும்போது; அவன் கிறிஸ்தவனாக மாறியதற்கு ஒரு சிறப்பான பதிலை சொல்லவேண்டும். அதை விட்டு எல்லாரும் ஞானஸ்நானம் எடுத்தார்கள் நானும் சென்று ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டேன் என்னை அவர்கள் சபையிலே சேர்த்துக்கொண்டார்கள். நான் சபைக்குப்போகிறேன் என்று ஒருவன் சொன்னால் இது சரியாகிவிடுமா? எனக்காக என்னுடைய பாவத்திற்காக ஒருவர் பலியாகி இருக்கிறார். நான் மரிக்கவேண்டிய இடத்தில் எனக்காக ஒருவர் மரித்திருக்கிறார். அவரை, தேவன் பலி ஆடாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உலகத்தில் இல்லை என்ற இச்செய்தியை அறிந்துகொண்டேன்; மேலும் "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசு சொல்லியிருக்கிறார். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரை விட்டால் வேறுவழியில்லை என்பதை நன்கு அறிந்துகொண்டேன் என்று ஒருவர் சொல்வாரேயானால் அது ஒரு சிறப்பான பதிலாக இருக்கும். அன்பானவர்களே, நீங்கள் எப்படி ஒரு கிறிஸ்தவராக மாறினீர்கள்? சத்தியத்தை நேசித்து அதற்குக் கீழ்ப்படிந்து நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்களானால் அது சரியாக இருக்கும், இல்லையேல் உங்களுடைய ஒப்புக்கொடுத்தலை மறு ஆய்வுசெய்யுங்கள்.

ஏனெனில்; "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1பேது.4:7). நாம் எப்படி ஜெபிக்கவேண்டும் என்பதற்கு ஆவியானவர் உதவியாயிருக்கிறார். அவர் நம்முடைய தேற்றரவாளன்.

எனவே அப்போஸ்தலர்களைக்கொண்டு எழுதும்போது தெளிந்து புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் என்று எழுதுகிறார். இன்றைக்கு அநேகர் ஜெபத்தை அலட்சியப்படுத்துகின்றனர். ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். அதற்கு நம்மை ஆயத்தப்படுத்தி ஜெபிக்கவேண்டும். ஒரு அதிகாரியைப் பார்க்கப்போகிறோம் எவ்வளவு ஆயத்தத்தோடு செல்லுகிறோம். சாதாரண அதிகாரியைப் பார்க்க இவ்வளவு ஆயத்தமாக செல்லும்போது பரலோகத்தில் இருக்கிற பிதாவோடு பேசும்போது எவ்வளவு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் நமக்கு அருமையான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை, நாம் நமக்குள் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. அப்பொழுது நாம் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம குமாரனுக்கு எழுதும்போது; "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்று எழுதுகிறார் (1தீமோ.1:14). நமக்கு உதவியாக கொடுக்கப்பட்ட தேற்றரவாளன் அதாவது பரிசுத்த ஆவியானவர், கர்த்தருடைய வசனங்களை நமக்குள் வைத்து பாதுகாக்க உதவியாயிருப்பார். அவரைக்கொண்டு அவைகளை பாதுகாக்கவேண்டும். நீங்கள் எப்படி உங்களை காத்துக்கொண்டு வருகிறீர்கள். உங்களுடைய சுயமுயற்சியினால் கிறிஸ்தவத்தில் நிலைத்திருக்க முடியாது. உங்களைத் தேற்றும்படியாகவும், உங்களுக்கு பலத்தைக்கொடுக்கும்படியாகவும், அன்பும் தெளிந்த புத்தியையும் கொடுக்கும்படியாகவும் வந்த தேற்றரவாளனோடு சேர்ந்து கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்.

**அப்போஸ்தலருக்கு ஆவியானவர் கொடுக்கப்படும்போது, நீங்கள் பெலனடைவீர்கள் என்று சொல்லப்பட்டதா?**

ஆம், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8). ஆண்டவர் கட்டளையிட்டபடியாக அப்போஸ்தலர்கள் பெந்தேகொஸ்தே என்னும் நாளில் மேல் வீட்டில் தங்கியிருந்தனர் அப்பொழுது அவருடைய வாக்குத்தத்தின் படியான அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. இப்படியாக அவர்கள் பெலனடைந்து உலகமெங்கும் சாட்சிகளாக கொண்டு செல்லப்பட்டு கர்த்தருடைய ராஜ்யத்தின் பணியில் பயன்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வரங்கள் எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லை. தேவன் தம்முடைய ராஜ்யத்தில் சிலரை அப்போஸ்தலராகவும் சிலரைமேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்துகிறார் என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ள வேண்டும். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் மேய்ப்பர்களா? அவரவருக்கு தேவனால் அளிக்கப்படும் வரம் உண்டு. எல்லாமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக கொடுக்கப்பட்டது. அதை ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு தேவனுடைய பண்ணையில் செயல்படவேண்டும். இன்று தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்த நாம் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுத்து, ஆவியானவருடைய உதவியோடு தேவனை ஆராதிக்கவும் அவரை மகிமைப்படுத்தவும் முற்படவேண்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## தேவ அன்பு பூரணப்பட்டிருக்கிறது

## The Love of God Is Perfected

-Glory Arjunan



அன்பு சகோதரிகளே, தேவனுடைய அன்பு பெரியது என்பதை ருசித்ததுண்டா? தேவன் அன்பாகவே இருக்கிறார் எனவே தான் நம்மை நம் பாவங்களிலிருந்து விடுவிக்கும்படி தம்முடைய ஒரே குமாரனையே கொடுத்திருக்கிறார். இதனை அறிந்த நாம் மெய்யாக அவருடைய அன்பு பூரணமானது. இவ்வுலகில் ஒருவராலும் கொடுக்கக் கூடாத அன்பினை நம்மேல் பொழிந்தருளிக் கொண்டே இருக்கிறார் நாம் அல்ல அவரே நம்மிடத்தில் கூர்ந்தார் என்பதையெல்லாம் அவ்வப்போது மறந்துவிடுகிறோம். இதற்கெல்லாம் காரணம், நாம் அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுகிறதில்லை, அவருடைய கற்பனைகளைக் கைகொள்ளுகிறதில்லை. நாம் அவருக்குள் இருக்கிறோம், அவரே நம்மை போஷிப்பார், அவரே நம்மை எல்லாவற்றினின்றும் காப்பார், அவரே நம்மை முழுவதும் கவனித்துக் கொள்ளுவார் என்பதையெல்லாம் மறந்து ஒவ்வொரு வாரமும் சபைக்குச் சென்று வசனத்தைக் கேட்டும் பலனற்றவர்களாக போய்விடுகிறோம். இப்பேர்பட்டவர்களைக் குறித்து இயேசு தாமே தம்முடைய உவமையில் இவ்விதமாய் கூறுகிறார். மாற்கு புத்தகம் 4ம் அதிகாரம் வசனங்கள் 18 முதல் 19 முடிய இப்படியாக வாசிக்கிறோம். "வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள். இவர்களே, முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். இவ்வசனத்தில் மூன்று காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது. அவைகளைக் குறித்து தியானிப்போம்.

**உலகக் கவலைகள்:**

வசனத்தைக் கேட்டாலும் உலகக் கவலைகள் நமக்குள் உட்பிரவேசிக்கிறது. இதனால் நம்மில் அநேகர் தேவ அன்பினையே மறந்து விடுகின்றனர். அவருடைய வசனம் கூறுகிறது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து... தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6). ஆனால் நாமோ நம்முடைய கஷ்டங்கள், கவலைகள் மனப்பாரங்கள், மன உளைச்சல்கள் இவற்றையெல்லாம் தேவனுக்குத் தெரியப்படுத்தாமல் நம்முடைய சொந்தங்கள், பந்தங்கள், அண்டை வீட்டார் என நாசியில் சுவாசமுள்ள மனிதர்களிடம் தெரிவித்து விட்டு மென்மேலும் கவலைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம். தேவனைத் தவிர எந்த மனுஷனால் உங்கள் கவலைகளைத் தீர்க்கமுடியும்? எல்லாருக்குமே ஏதோ பிரச்சனைகளும், பாடுகளும் நிச்சயமிருக்கும். எந்த மனுஷராலும் உங்களுக்கு ஒன்றும் செய்யமுடியாது. உங்கள் கவலைகளை நீக்கி விடவும் முடியாது."மனுஷருடைய உதவி விருதா" என்று வேதம் சொல்லுகிறது. மேலும் வேதம், கவலைப்படுகிறதினால் எவன் தன் சரீரத்தில் ஒரு முழத்தைக் கூட்ட முடியும்? என கேள்வி எழுப்புகிறது. "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார்" (சங்.55:22) என்ற வசனத்திற்கு ஜீவன் இல்லை என நினைக்கிறீர்களா? ஏன் கவலைப்படவேண்டும்? காரணம், உலகம் உங்களுக்குள் இருக்கிறது. உலகத்தின் காரியங்கள் உங்களுக்குள் இருக்கிறது. உலகத்தையும், உலக ஜனங்களையும் பார்த்து அவர்களைப் போல உங்களையும் மாற்றிக் கொள்ள நினைக்காதீர்கள். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்;.." (1யோவா.2:17). உலகத்தில் யாருடைய அன்பையும் நாம் இழந்து போகலாம். அதினால் எந்த நஷ்டமும் வந்துவிடாது. ஆனால் பிதாவின் அன்பினை இழந்துவிட்டால் நம்மால் அசையக் கூட முடியாது என்று பயத்தோடிருப்போம்.

# வம்ச வரலாறும் இல்லாதவன்

–ஆசிரியர்

மெல்கிசேதேக்கு வம்ச வரலாறும் இல்லாதவன் என வேதம் சொல்லுகிறது. அதே வேதம் "ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார்" என ஆதி.5:1 ம் வசனத்தில் படிக்கிறோம். புதிய ஏற்பாட்டின் துவக்கத்திலும் "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:" என மத்.1:1 ல் வாசிகிறோம். ஆபிரகாம் துவங்கி இயேசுகிறிஸ்து மட்டும் 42 தலைமுறைகளைப் பற்றி தெளிவாக பேசப்பட்டுள்ளது. இதில் ஆபிராம் நாட்களில், "உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.

வம்ச வரலாறு அட்டவணையில் இல்லாதவன் மெக்கிசேதேக்கு. ஆனால் ஆபிராமுடைய நாட்களில் அவனை ஆசீர்வதிக்கக்கூடிய உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயும் இருந்தான். அவன் கையில் தசமபாகம் வாங்கக்கூடியவனாயுமிருந்தான். இதிலும் இன்னும் விசேஷம் என்னவென்றால்; இவனைப்போல நிலையான ஆசாரியர் தோன்றினார். இன்றைக்கு நீங்களும் நானும் அவருடைய சந்ததிகளாயிருக்கிறோம். இது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா! "ஆபிரகாமுக்கு அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" (கலா.3:16). ஆபிராம் முதல் இயேசுகிறிஸ்து வரை சொல்லப்பட்ட 42 சந்ததிகளில் கிறிஸ்து முடிவானவராக இருக்கிறார் என்பதை கவனியுங்கள். அதற்கு பின்பு வம்ச வரலாறு பேசப்படவில்லை. நாமெல்லாரும் அவருக்குள் அந்த சந்ததிக்குள் இருக்கிறோம்.

"நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால், மேற்சொல்லியது மிகவும் பிரசித்தமாய் விளங்குகிறது. அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது" (எபி.14-18).

சங்கீதக்காரனாகிய தாவீதும் இவரைப்பற்றி "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்" என்றான் (சங்.110:4).

ஆதாமின் மூலமாக வம்ச வரலாறு உருவானது. வம்ச வரலாறு இல்லாத மெல்கிசேதேக்கைப்போல நம்முடைய ஆண்டவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். மேலும் ராஜாதி ராஜாவுமானார்.

மெல்கிசேதேக்கு "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களில் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான். இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்" (எபி.7:3,4). எந்த ஒரு மனுஷனும் தேவனாலே உண்டானவன். அவருடைய நோக்கத்தை அறியுங்கள். அருவடைய சந்ததியில் இருங்கள். அவருடையவர்களாயிருங்கள்.





## இரட்சிப்பைக் குறித்து ....வேதாகமம் என்ன போதிக்கிறது?
## What Does the Bible Say About... Salvation?

*-J.C.Choate*

(தயவு செய்து வேதவாக்கியங்களை வாசித்து இந்த வினாவை ஆழ்ந்து சிந்தித்து விடையை சரிபாருங்கள்)

**1. சுவிசேஷம் என்றால் என்ன?**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளிலே உயிர்த்தெழுந்து..." (1கொரி.15:1-4).

✦ இரட்சிப்பு

✦ கிறிஸ்துவில் நம்பிக்கை

✦ கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவற்றின் நற்செய்தி.

**2. ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?**

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16).

✦ விசுவாசத்தை மட்டும் கொண்டிரு.

✦ மன்னிப்பிற்காக ஜெபியுங்கள்.

✦ கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் .

**3. விசுவாசம் எப்படி வருகிறது?**

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).

✦ ஒரு வெளிப்பாட்டை காண்பது மூலம்.

✦ தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுவதன் மூலம்.

✦ கர்த்தர் தனிப்பட்ட விதத்தில் ஒருவனுடன் பேசுவதின் விளைவுபடி.

**4. மனந்திரும்புதல் என்றால் என்ன?**

ஒரு தகப்பன் தன் மகனை தன்னுடைய தோட்டத்திற்குச் சென்று வேலை பார்க்கும்படி கேட்டுக்கொண்டான். "அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மத்.21:29). மனந்திரும்புதல், என்பது ஒரு மனம் மாற்றம், மனந்திரும்புகின்ற செயல் மேலும் வேறொரு வழியில் சென்றுகொண்டிருத்தல் ஆகும். பவுல் இதை இவ்வாறாக விளக்குகிறார்:

"திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" (எபே.4:28).

- ஒருவனுடைய பாவங்களை அறிக்கையிடுதல்.
- மன்னிப்பிற்காக கர்த்தரை நோக்கி கேட்பது.
- ஒருவனுடைய பாவங்களிலிருந்து திரும்புதல்.

**5. ஒருவன் செய்ய வேண்டிய அறிக்கை என்ன?**

எத்தியோப்பியாவிலிருந்து ஒரு மனிதன் வந்தபோது அவன் முழு மனதுடன் விசுவாசித்தால் என்று அவன் வினவப்பட்டபோது அவன் ஞானஸ்நானம் பெற்று கொள்ளும்படி விரும்பினான், "அதற்கு பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி" (அப்.8:37). பிறகு பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அறிக்கை மனிதருக்கு முன்பாக வாயினால் உருவாக்கப்படவேண்டியிருக்கிறது. (ரோம.10:10; மத்.10:32).

- அது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது.
- அது ஏற்கனவே தன்பிழைக்காக மனந்திரும்பின விசுவாசி இரட்சிக்கப்பட்டிருக்கிறான்.
- ஒருவனுடைய பாவங்களின் அறிக்கை.

**6. ஞானஸ்நானம் அவசியமானதா?**

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1பேது.3:21). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோம.6:3). "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரி.12:13). இங்கு சரீரமே சபையாக இருக்கிறது (கொலோ.1:18).

- ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின் அடையாளம்.
- ஞானஸ்நானம் தேவையில்லை.
- ஒருவன் முழு இருதயத்துடன் கிறிஸ்துவை விசுவாசித்தால், அவன் கிறிஸ்துவுடனும் அவருடைய சரீரமாகிய சபையோடு இணைக்கப்படும்படிக்கு, அவன் ஞானஸ்நானம் பெறும்படி தயாராயிருக்கிறான்.

**7. ஞானஸ்நானம் என்றால் என்ன?**

"ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்



பிரசங்கத்தை அல்லது செயல்களைப் பற்றி நாம் வாசிக்கவில்லை பிதாவின் ஆவியானவர் அவர் மேல் இறங்கி அவரைப் பெலப்படுத்தினப் பிறகே அவர் தாம் எதைச் செய்யும்படிக்குப் பிறந்திருந்தாரோ அதைச் செய்ய ஆரம்பித்தார்.

4. இந்தப் பணி உலகத்திற்கும், எதிர்காலம் முழுமைக்கும், தேவனுடைய இரட்சிப்பின் செய்தியாகக் கொண்டவரப்படவேண்டியதாயிருந்தது - இச்செய்தியானது பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே புதிய ஏற்பாட்டில் நமக்காகப் பத்திரப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணியின் நிறைவேறுதல் அவருடைய காட்டிக் கொடுக்கப்படுதல், பாடுகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆக இருந்தது. இஸ்ரவேலின் ரோம ஆளுகையின் போது ஆயிரக்கணக்கானோர் சிலுவையில் அறையப்பட்டனர், ஆனால் இப்போது அவர்களில் எத்தனை நபருடைய நாமங்களை நாம் அறிவோம்? ஒரே ஒருவருடைய நாமம் இயேசு கிறிஸ்து! இதற்குக் காரணம் அவரோடுகூட அவருடைய செய்கைகள் மரிக்கவில்லை ஏனென்றால் அவர் வாக்களித்திருந்தபடியே மூன்றாம் நாளில் அவர் கல்லறையிலிருந்து உயிரோடெழுப்பப்பட்டார்.

5. தம்முடைய சீஷர்களுக்கு வாக்களித்த பின் நாற்பது நாட்களுக்குப் பின் (யோவா.14:18) "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் உங்களிடத்தில் வருவேன்... அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் இப்போது வீற்றிருக்கிற இடமாகிய பரலோகத்திற்கு ஏறிப் போனார். 1தீமோ.6:15 அவர் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவாகவுமாக இருக்கிறார் என்று சொல்லுகிறது மேலும் 1கொரி.15:24 எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும் ஆவர் ஆளுகை செய்வார், கடைசி சத்துரு மரணமும் பரிகரிக்கப்படும். பின்பு இவர் ராஜ்யத்தைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார், ரோமர் 8:16,17 ன்படி இவர் தம்முடைய சகோதர, சகோதரிகளோடு கூட தேவனுடைய சுதந்தரருமாவார். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் - நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபாட்டால் அப்படியாகும்".

VIII. தேவனுடைய குமாரன், வெறுமையாக்கிய வார்த்தை தேவனுக்குச் சமமாயிருப்பதை உரிமை பாராட்டாமல் இருந்த இயேசு நிரூபிக்கிற சாட்சியின் ஒரு மாபெரும் சரீரத்தைக் கொண்டவர் - ஒரு ஏழை பெற்றோர்க்கு முக்கியமில்லாத (சாதாரண) கிராமத்தில் இவர் பிறந்தாலும் கூட, பரதேசியாக அலைந்து திரியும் வாழ்க்கை வாழ்ந்தார், பின்பு "குற்றவாளியாக " தீர்க்கப்பட்டு சிலுவையில் மரித்தார், இவருடைய வாழ்க்கை, போதனைகள் உலகமுழுவதிலும் பல லட்சங்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. இவருடைய ஆதரவாளர்களால் பெரிதாக நினைவகம் ஒன்றும் கட்டப்படவில்லை, ஆனால் 2000 ஆண்டுகளாக வாரத்தின் முதல் நாள்தோறும் தங்களை "கிறிஸ்தவர்கள்" என்றழைத்துக்கொள்ளுகிற லட்சாதி லட்சம் பேர் புளிப்பில்லா அப்பத்தைப் பிட்டு, திராட்சரசத்தை பானம் பண்ணி, அவருடைய சரீரத்தை ஜீவனுள்ள நினைவுகூருதலாக இராப்போஜனத்தை அநுசரித்து நம்முடைய பாவங்களுக்குக் கிரயமாக செலுத்தப்பட்டது என நினைவுகூரப்பட்டுவருகிறது.

பெண்கள் பகுதி



## ஏலோகிம் - Elohim -Betty

### குமாரன் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளார்

VII. கர்த்தராகிய தேவன் தேவத்துவத்தில் முதல் நபரானார், பாவம்நிறைந்த மனிதவர்க்கத்தின் இரட்சிப்பிற்காக முன்னேற்பாடு ஏற்படுத்தப்பட்ட நேரம் இது யோவா.1:14 கூறுகிறது "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"

1. பழைய ஏற்பாட்டில், நான் சரியாக எண்ணிப்பார்த்திருந்தால், தேவனைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட "பிதா" என்ற வார்த்தை 11 தடவைகள் மட்டுமே காணப்படுகிறது! இது "வார்த்தையானவர்" தம்மைத் தாமே வெறுமையாக்கி (பிலி.2:5-8) தேவனுடைய குமாரனாக பிறந்து மேலும் மனிதனுடைய சகோதரனாக இருந்த நிகழ்வு வரை மட்டுமல்ல, தொடர்ந்து தேவன் "பிதா" என அழைக்கப்படுகிறார். இது நம்முடைய சகோதரனாகிய மூத்த குமாரன் என்ற உறவின் மூலம் - நாம் ஆவிக்குரிய ரீதியில் தேவனுடைய பிள்ளைகளாகப் பிறக்க முடியும், அவர் நமது பிதாவாகிறார்!

2. சிலர் இயேசு 100 சதவீதம் தேவனாகவும் 100 சதவீதம் மனிதனாகவும் இருந்தார் எனக்கூறலாம், ஆனால் இவையெல்லாம் எவ்வாறு வேதவாக்கியத்தில் இவர் சித்தரிக்கப்பட்டுள்ளார் என்பதை எபி.10:5ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது அவர் சொன்னார்... நீர்... ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" எனவே மரியாளின் கர்ப்பத்தில் நித்திய வார்த்தையானவர் வாசம்பண்ணி இயேசுவின் சரீரத்திற்கு ஜீவனுள்ள ஆத்துமாவாக மனித சரீரம் கொடுக்கப்பட்டது. அவர் மனுஷரைப்போல வாழ்ந்தார், ஞானத்திலும் மனிதர் தயவிலும் கூட வளர்ந்தார். இயேசுவுக்கும் எப்போதும் பிறக்கிற மற்ற மனிதனுக்கும் ஒரு பெரிய வேறுபாடு என்னவென்றால் இயேசு ஒரு பாவமும் செய்யவில்லை என்பதே ஆகும். இது என்னவென்றால் முழுஉலகத்தின் பாவங்களுக்காக பலியாகும்படிக்கு பரிசுத்தரானார்.

3. பிதாவிற்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்கும்படி வார்த்தையானவரின் சமநிலை ஒதுக்கப்பட்டிருந்தது. யோவான் சுவிசேஷத்தை கூர்ந்து வாசியுங்கள், அப்போது இயேசு வெளிப்படையாக "...அவர் தாமே சுயமாய் ஒன்றும் செய்யாமல்" என்றார். யோவான் 8:28 மற்றும் 14:10ல், அவர் பேசின வார்த்தைகள் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டவைகள் என்றும் அவர் செய்தவைகள் பிதாவின் வல்லமையினால் செய்யப்பட்டவைகள் என்றும் வெளிப்படையாகவே இயேசு அறிவித்தார். அவர் மனுஷனுடைய **சகோதரனாக** பிறந்தபோது அவர் தம்மை தேவனைச் சார்ந்தவராக நாம் சார்ந்திருக்கும் வண்ணமாகவே மாற்றிக்கொண்டார். அவர் ஞானஸ்நானம் பெறும்வரை எவ்வித



களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ.2:12). "இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்" (அப்.8:38).

- தண்ணீரில் அடக்கம்.
- தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல்.
- ஒரு அடையாளமான சைகை.

**8. வேதாகமத்தில் 'ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர், எப்போதும் இரட்சிக்கப்பட்டுள்ளார்" என்ற கோட்பாடு போதிக்கப்பட்டுள்ளதா?**

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:12). "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது" (2பேது.2:20-22).

- ஆம்.
- இல்லை.
- பதில் தெளிவாக இல்லை .

**9. இரட்சிக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள்?**

"...இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப்.2:47).

- இயேசு இரட்சிப்பதற்கென மரித்ததால் இரட்சிக்கப்படுகிற அனைவரும் சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள்.
- எல்லா குழுக்களிலும் இரட்சிக்கப்பட்ட மக்கள் உள்ளனர் .

**10. கிறிஸ்துவின் சபை இன்று இருக்கின்றதா?**

"... பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்" (தானி.2:44,45; அப்.2; மத்.16:17,18).

- இல்லை.
- ஆம், ஞானஸ்நானம் பெற்ற சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர்களாகயிருக்கிறார்கள்.

# உங்களுக்குத் தெரியுமா?

- K.R.K.Ravi Asir

- ❐ புறாவின் இறக்கையில் 135 இறகுகள் இருக்கும்.
- ❐ ஒரு யுகம் என்பது 43,20,000 ஆண்டுகள்.
- ❐ மயில் இறகில் 9 வண்ணங்கள் இருக்கின்றன.
- ❐ மரங் கொத்தி மணிக்கு 1300 மைல் வேகத்தில் மரத்தைக் கொத்தும்.
- ❐ தவளைகள் கண்கள் வழியாக ஒலியைக் கேட்கும்.
- ❐ மெக்சிகோவில் உப்பைக் கடவுளாக வழிபட்டனர்.
- ❐ மனிதன் ஓராண்டில் 1400 கனவுகள் காண்கின்றான்.
- ❐ மயிரிழை என்பது ஓர் அங்குலத்தில் 48ல் ஒரு பாகம்.
- ❐ 'வைட்டமின் உலோகம்' என அழைக்கப்படுவது வனோடியம்.
- ❐ ஜப்பான் நாடு 3900 தீவுகளைக் கொண்டது.



## ஜெபியுங்கள்

- ✦ கொரோனா நோயிலிருந்து ஜனங்கள் காக்கப்பட...
- ✦ பெருகி வரும் கொலை, கொள்ளை சம்பவங்கள் ஒடுக்கப்பட...
- ✦ சமாதானத்திற்காக...
- ✦ வன்முறை சம்பவங்கள் ஒழிய...
- ✦ சபை ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற...



## பொது அறிவு சோதனை

A. Prison என்பது

1. சிறை 2. சட்டைப் பை 3. ஜெல்லி

B. Ring என்பது

1. குறை 2. வளைவு 3. மணியடி

C. Regret என்பது

1. வருத்தப்படு 2. தரைப்படை 3. விடுகதை

D. Motion என்பது

1. தவிர்க்க முடியாத 2. இயக்கம் 3. செல்வாக்காளரான

E. Pipe என்பது

1. சுங்கான் 2. ஒளிக்கற்றை 3. சரித்திரம்

**விடைகள்:**

A. சிறை

B. மணியடி

C. வருத்தப்படு


D. இயக்கம்

E. சுங்கான்

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



# 120 வயதில் மரித்த மோசேயின் மரணம் முடிவல்ல...



மோசே ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன். "பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்" (அப்.7:21,22). பின்பு "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப் படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி.11:25,26). அந்நாட்களில் கிறிஸ்துவினிமித்தம் பாடுகளை அனுபவித்தான்.

இவனுடைய சொற்படி கேட்டு கர்த்தர் எகிப்திலே அநேக வாதைகளை வரப்பண்ணினார் யாத்திராகமம் 8:13,31 வசனங்கள். இவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் எபிரெயர் 3:2. ஆண்டவர் இயேசு ஒரு முறை பேதுரு, யோவான், யாக்கோபு போன்றோரை அழைத்துக் கொண்டு ஜெபிக்கும்படியாக ஒரு மலையின்மேல் ஏறினார்கள். அப்பொழுது மோசே எலியா என்னும் இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே சம்பாஷணைப்பண்ணி, அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் என லூக்கா 9:30,31 வசனங்களில் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்தில் 40 வருஷமாக வனாந்திரத்தில் 6 லட்சத்திற்கும் மேற்பட்டோரை வழிநடத்திக்கொண்டு வந்த மோசே இயேசுவின் நாட்களில் அவரோடு அவருடைய மரணத்தைக்குறித்து பேசிக்கொண்டிருந்திருக்கிறார் என்றால் தேவத்துவத்தில் மோசேயின் ஐக்கியம் எவ்வளவு நெருக்கமுள்ளதாக இருந்திருக்கிறது என்பதை எண்ணிப்பாருங்கள். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். 40 நாள் தேவ சமுகத்தில் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் அவரோடிருந்தான். அந்தப்படியாக இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று 40 நாட்கள் உபவாசமாக இருந்தார்.

மோசே மரிக்கிறபோது 120 வயதுள்ளவராயிருந்தான். முதல் 40 வயது அரன்மனை வாழ்வு, அடுத்த 40 வயது ஆடுகளை மேய்த்தான். அடுத்த 40 வயது கர்த்தருடைய ஊழியம் இஸ்ரவேலை வழிநடத்தினான். அவனுடைய கண்கள் இருளடையவில்லை, அவன் பெலன் குறைந்துபோகவில்லை. தேவன் ஆபிரகாமுக்கு வாக்குதத்தம் செய்த கானானை அவனுக்குக் காண்பித்தார். ஆனாலும் நீ அவ்விடத்திற்கு கடந்துபோவதில்லை என்றார். அவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவனை ஒரு பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். இவன் மனைவி சிப்போராள் மற்றும் கெர்சோம், எலியேசர் இரண்டு பிள்ளைகளும் அறியார்கள். ஒருவேளை இஸ்ரவேலர் மத்தியில் மரித்திருந்தால் 6 லட்சத்திற்கு மேற்பட்டோர் அந்த அடக்கத்தில் கலந்திருப்பார்கள். யாருக்குமே கிடைக்காத ஆசீர்வாதம் அவனுக்குக் கிடைத்தது தேவனே மேசேயை அடக்கம் செய்தார்.

இந்த கொரோனா காலத்தில் உறவினர்கள் ஒருவரையொருவர் சந்திக்க முடிவதில்லை. அடக்கத்திலும் கலந்துகொள்ள முடிவதில்லை. இஸ்ரவேலர் மோசேக்காக 30 நாட்கள் துக்கங்கொண்டாடினார்கள். இது அவர்களுடைய பாசத்தை வெளிப்படுத்துகிறது. இது மோசேயின் முடிவுவல்ல... மரணம் என்ற கவலை அநேகருக்கு இருக்கிறது. கர்த்தர் சகலத்தையும் அறிகிறார். அவரோடு அவரைப் பற்றிக்கொண்டிருங்கள்.

அல்லது கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கிற ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரே தலையாகிய கிறிஸ்துவின் கீழ் சமமானவர்களாக இருக்கிறார்கள்.

**3. எல்லார் மத்தியிலும் அன்பு, விருப்பம் மற்றும் ஒத்துழைப்பு:**

எல்லா கிறிஸ்தவர்களும் மற்ற கிறிஸ்தவர்களை சகோதரர்களாக நேசிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே தேவனுடைய குடும்பத்தில் இருக்கிறார்கள் (1யோவா.3:1) எல்லா அங்கத்தினர்களும் முறையாக செயலாற்றுவதில் விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள். அனைவரும ஒரே சரீரத்தின் அவயவங்களாக இருக்கிறார்கள் (1கொரி.12:12,13). சகல இனத்தாரும, கோத்திரத்தார்களும் கிறிஸ்துவின் சரீரத்தில் சமமானவர்களாக இருக்கிறார்கள், ஸ்திரீகளும், மனுஷரைப்போலவே மதிப்புடையவர்களாக இருக்கிறார்கள் (கலா.3:26-28). ஒரே சரீரத்தின் உடன் அங்கத்தினர்களாக கிறிஸ்தவர்கள் எல்லா பிராந்திய சபைகளின் அங்கத்தினர்களிடத்திலும் விருப்ப முடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் எந்த விதமான பிரிவினையும் ஒரு போதும் இருக்க வேண்டாம் (1கொரி.12:25). எல்லா அங்கத்தினர்களும் ஒருவருக்கொருவர் ஒரேவிதமான அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள். ஒரு அங்கத்தினர் உபத்திரவப்படுவாரேயானால் மற்றெல்லா அங்கத்தினர்களும் அவரோடே கூட உபத்திரவப்படுகிறார்கள். ஒரு அவயவம் கனப்படுத்தப்பட்டால், சகல அவயவங்களும் அதனோடே கூட சந்தோஷப் படுகின்றன (1கொரி.12:25,26). நம்முடைய மனித சரீரத்தின் ஒருபாகம் காயம் அடையும் பொழுது முழு சரீரமும் அதைக்குறித்து அக்கறையாயிருக்கிறது. இதே விதமாக கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். கிறிஸ்துவின் முழுமையான சரீரத்தில் இருக்கிற மற்ற அனைத்து அங்கத்தினர்களுக்காகவும் நாம் அன்பும், விருப்பமும், ஒத்துழைப்பும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

**கேள்விகள்**

1.கொலோ.1:18 சொல்கிறது கிறிஸ்து---------------- அல்லது ----------- தலையாயிருக்கிறார் என்று

2. கிறிஸ்து ----- ----- ----------- -------- என்று மத்.28:18 போதிக்கிறது.

3. கிறிஸ்துவின் சரீரத்துக்கு எத்தன தலைகள் இருக்கின்றன? ----------

4. கிறிஸ்துவின் சரீரத்தில் எல்லா அங்கத்தினர்களும் சமமானவர்களாயிருக்கிறார்களா? ---------------.

5. நம்மெல்லாருக்கும் ஒரே ---------- என்று 1கொரி.12:5 உரைக்கிறது.

6. கிறிஸ்துவின் சரீரத்திலே ஒவ்வொரு அங்கத்தினரும் முக்கியமானவராக இருக்கிறாரா? ---------------

7. ஒவ்வொரு இனத்தைப்பார்க்கிலும் மற்றொரு இனம் பெருமை வாய்ந்ததாக இருக்கிறதா?

8. ஒரு மனுஷனைப் போன்று ஒரு ஸ்திரீயும் கிறிஸ்துவுக்கு மதிப்புடையவராய் இருக்கிறாரா?---------------

9. வேறுபட்ட பிராந்திய சபைகளின் அங்கத்தினர் அனைவரும் ஒரே சரீரத்தின் அவயவங்களாக இருக்கிறார்களா? ---------------------

10. 1கொரி.12:25 உரைக்கிறது சரீரத்திலே -------------- உண்டாயிருக்க வேண்டாம் என்று.



## வேத அறிவுப்போட்டி 238-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. தேவாலயத்திலே | - யோவா.5:14 |
| 2. தாவீது | - 2சாமு.22:28 |
| 3. மோசே | - அப்.7:25 |
| 4. யெரொபெயாம், அகியா | - 1இரா.14:4 |
| 5. பவுல் | - ரோம.7:11 |
| 6. நான்கு | - 2இரா.7:3-5 |
| 7. அற்பமாய் | - 1கொ.6:4 |
| 8. ஆசாப் | - 1நாளா.16:5 |
| 9. பவுல் | - 2கொ.11:33 |
| 10. எசேக்கியா | - 2நாளா.30:6 |

## வேத அறிவுப்போட்டி 239-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஆபிரகாமுக்கு | - கலா.3:8 |
| 2. எஸ்றா | - எஸ்றா 7:21 |
| 3. எச்சரிக்கையாயிருக்க | - எபே.5:6 |
| 4. நெகேமியா | - நெகே.6:14 |
| 5. பவுல் | - பிலி.1:18 |
| 6. எஸ்தர் | - எஸ்தர் 2:20 |
| 7. மனுஷர்களின் | - கொலோ.2:8 |
| 8. யோபு | - யோபு 1:6 |
| 9. பவுல் | - 1தெச.2:21 |
| 10. கர்த்தரால் | - சங்.37:23 |

### வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் (238)

| | |
|---|---|
| 1. J.S. ஜெயாமேரித்தாய் | - திண்டுக்கல் |
| 2. Mrs. ராணிமூர்த்தி | - திருநெல்வேலி |
| 3. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 4. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 5. D. அடைக்கலம் | - காரைக்குடி |
| 6. E. அதிசயம் | - பனைகுடி |
| 7. T. ராஜாத்தி | - கோம்பை |
| 8. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 9. Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 10. V.C. ரூபவல்யா | - நாசரேத் |
| 11. J. ஆலிவ் | - கோவை |
| 12. S. ரூபி ஜெயசேகர் | - கலுங்குவிளை |
| 13. Mrs. ருக்மணிஜெயசீலன் | - பண்ணைப்புரம் |
| 14. J. சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 15. S. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 16. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 17. Mrs. ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 18. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 19. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 20. S. செல்வராஜ்சாலமோன் | - வள்ளியூர் |
| 21. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - மருதகுளம் |
| 22. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 23. Mrs. ஜெனிதர்மராஜன் | - பாக்கியநாதபுரம் |
| 24. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 25. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 26. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 27. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - பெருமாள்புரம் |
| 28. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 29. S. தங்கம் | - சாந்தாபுரம் |
| 30. T. ஏஞ்சலின்நேசமலர் | - சாந்தாபுரம் |
| 31. Mrs.சாந்தாபழனி | - தர்மபுரி |
| 32. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 33. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 34. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 35. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 36. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 37. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 38. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுவை |
| 39. Mrs. ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 40. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 41. Mrs. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 42. M. முருகன் | - நாமக்கல் |
| 43. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 44. Mrs. ஜெபாமோசஸ் | - விளாத்திகுளம் |
| 45. Mrs. ராஜம்மாள் மனோகரன் | - சென்னை |
| 46. Mrs. ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 47. Mrs. ஜெயராணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 48. J. பிச்சை | - விருதுநகர் |
| 49. S.V. தனபால் | - ஆவுடையார்பாறை |

### வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் (239)

| | |
|---|---|
| 1. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 2. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 3. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 4. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 5. Mrs. ராணிமூர்த்தி | - திருநெல்வேலி |
| 6. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 7. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் | - கோவை |
| 8. S. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 9. Mrs. உஷாசாம் | - தூத்துக்குடி |
| 10. Mrs. ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - பெருமாள்புரம் |
| 11. Mrs. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 12. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 13. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 14. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 15. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 16. பெயர்எழுதாதவர் | - சாத்தான்குளம் |
| 17. S. செல்வராஜ் | - வள்ளியூர் |
| 18. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 19. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 20. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 21. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 22. J. விக்டர்சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 23. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 24. J. பிச்சை | - விருதுநகர் |
| 25. Mrs. ஜெபாமேசஸ் | - விளாத்திகுளம் |
| 26. Mrs. ஏசுமணி ஏசுதாஸ் | - ஆனந்தபுரம் |
| 27. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 28. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 29. Mrs. ஜெனிதர்மராஜ் | - பாக்கியநாதபுரம் |
| 30. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 31. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 32. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 33. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 34. R.எமிமாள் | - ஆனந்தபுரம் |
| 35. E. அதிசயம் | - பனைகுடி |
| 36. T. ராஜாத்தி | - கோம்பை |
| 37. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - மருதகுளம் |
| 38. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 39. M. முருகன் | - நாமக்கல் |
| 40. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 41. Mrs. ஜெபராணிஜெபராஜ் | - மேற்குதாம்பரம் |
| 42. Mrs. ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 43. Mrs. ருக்மணிஜெயசீலன் | - பண்ணைப்புரம் |
| 44. Mrs. ஜாய்கமலம் | - நாசரேத் |
| 45. Mrs. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 46. C.அருள்ராஜ் | - சென்னை |
| 47. S.ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 48. D. சாந்தாதேவி | - பண்ணைப்புரம் |
| 49. R.V. துரைசாமி | - சேலூர் |
| 50. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 51. S.A. சாமுவேல் | - பரமத்தி |
| 52. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுகை |

வேதஅறிவுப்போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்கள். சிலர் வாட்ஸ்ஆப் மூலம் பதில் அனுப்பியிருந்தீர்கள்
கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிப்பாராக!

**வேதகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



**தற்சோதனை பகுதி - 24**

**24. ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே?**

1. மனுஷருக்குத் தெரியாது ☐ வசன ஆதாரம் ---------
2. ஞானத்தைச் சம்பாதிக்க முடியாது ☐ வசன ஆதாரம் ---------
3. பொன்னும் பளிங்கும் அதற்கு ஒப்பல்ல ☐ வசன ஆதாரம் ---------
4. மூடனுக்கு அது எட்டாத உயரமல்ல ☐ வசன ஆதாரம் ---------
5. எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கு நிகரல்ல ☐ வசன ஆதாரம் - -------------------------------------------------------------------------
6. ஞானத்தை கண்டடைய முடியாது ☐ வசன ஆதாரம்----------
7. தேவனோ அதின் வழியை அறிவார் ☐ வசன ஆதாரம்----------
8. ஞானமுள்ளவன் பெலமுள்ளவனல்ல ☐ வசன ஆதாரம்----------
9. ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம் ☐ வசன ஆதாரம் ---------
10. ஞானவான்களுடைய போதகம் ஒன்றுக்கும் உதவாது ☐ வசன ஆதாரம் - -------------------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*




**சந்தா செலுத்திவிட்டீர்களா?**

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001




# வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

– *மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**முழு சபை என்பது என்ன?**

**1. தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் கீழ்ப்படிந்திருத்தல்**

**2. எல்லா அங்கத்தினரும் கிறிஸ்துவுக்குக் கீழ் சமமானவர்களாக இருக்கிறார்கள்.**

**3. எல்லார் மத்தியிலும் அன்பு, விருப்பம் மற்றும் ஒத்துழைப்பு கலந்துரையாடல்**

**1. தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிந்திருத்தல்:**

உலகத்திலுள்ள சகல கிறிஸ்தவர்களாலும் உருவாக்கப்பட்டதே முழு சபை என்பதை முந்திய பாடம் போதித்தது. முழு சபை என்பது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறது, அது எல்லா பிராந்திய சபைகளிலும் உள்ள சகல அங்கத்தினர்களாலும் உருவாக்ப்பட்டதாயிருக்கிறது. விசுவாசிகளினால் ஆகிய இந்த பெரிய சரீரத்திற்கு இயேசுவானவர் தலையாயிருக்கிறார் (கொலோ.1:18,24) கிறிஸ்து மாத்திரமே அவருடைய சரீரத்திற்கு தலையாயிருக்கிறார், நம்முடைய மனித சரீரத்திற்கு ஒரு தலை இருக்கிறதுபோல நம்முடைய பூமிக்குரிய சரீரத்தின் எல்லா பாகங்களும் தலைக்கு கீழ்ப்படிகிறது போல, கிறிஸ்தவன் கிறிஸ்துவாகிய தலைக்கு கீழ்ப்பட்டவனாயிருக்கிறான். கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்.28:18). அவர் தம்முடைய சரீரத்திற்கு தம்முடைய போதனைகளை அவருடைய வார்த்தையின் மூலமாக அளிக்கிறார். வேதாகமத்தின் மூலமாக அளிக்கிறார் (மத்.28:19). உலகம் முழுவதிலும் ஒவ்வொரு மெய்யான அவருடைய ஆவிக்குரிய சரீரமாகிய ஒவ்வொரு சபையின் ஒரு அங்கமாக இருந்து தலையாகிய கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டவனாயிருக்கிறான்.

**2. எல்லா அங்கத்தினரும் கிறிஸ்துவுக்கு கீழ் சமமானவர்களாக இருக்கிறார்கள்:**

சகல கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களா யிருக்கிறபடியால் அவர்கள் சமமானவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு கிறிஸ்துவையன்றி வேறே தலை இல்லை. அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தையை அன்றி வேறெந்த அதிகாரத்தின் கீழும் இல்லை. முழு சபையிலும் எந்த ஒரு அங்கத்தினருக்கும் வேறெந்த அங்கத்தினர் மீதும் எந்த ஒரு அதிகாரமோ, வல்லமையோ, பதவியோ கிடையாது எந்த ஒரு அங்கத்தினருக்கோ அல்லது அங்கத்தினர் குழுவுக்கோ மற்ற அங்கத்தினர்கள் மேல் அதிகாரம் செலுத்துகிறதில்லை. தலையாயிருக்கிற கிறிஸ்துவின் கீழ் அனைவரும் சமமாயிருக்கிறார்கள். பல்வேறுபட்ட திறமைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றனர், ஆனால் அதிலே எந்தவொரு மேம்பட்ட நிலையும் இல்லை (1கொரி.12:4-6). ஒருவருடைய தாலந்துகளுக்குத் தக்கதாக வேறுபட்ட பணிகள் இருக்கின்றன, ஆனால் எந்த ஒரு அங்கத்தினரும் மற்ற எவருக்குமேலாகவும் உயர்த்தப் படுகிறதில்லை (1கொரி.12:12-24). முழு சபை